### களம் காணும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 2-ம் கட்ட தேர்தல் பிரச்சாரம்!

## நெல்லையில் இன்று தொடங்குகிறார்!

**தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.**

**இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், இரண்டாம் கட்ட பரப்புரையை இன்று (ஏப்ரல் 3ஆம் தேதி) திருநெல்வேலியில் தொடங்குகிறார்.**

**தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரண்டாம் கட்டமாக இன்று திருநெல்வேலியில் பரப்புரையை தொடங்குகிறார்.**



### தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் சுற்றுப்பயண விவரம்

**03.04.2026 (வெள்ளிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| மாலை 5 மணி | **திருநெல்வேலி -** பாளையங்கோட்டை (பொதுக்கூட்டம்) | திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, நாங்குநேரி, ராதாபுரம் |

**04.04.2026 (சனிக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **நாகர்கோவில்** (பொதுக்கூட்டம்) | கன்னியாகுமரி, நாகர்கோவில், குளச்சல், பத்மநாபபுரம், விளவங்கோடு, கிள்ளியூர் |
| மாலை 5 மணி | **சங்கரன்கோயில்** (பொதுக்கூட்டம்) | சங்கரன்கோயில், ஆலங்குளம், தென்காசி, வாசுதேவநல்லூர், கடையநல்லூர் |

**05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை)**

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| காலை 9 மணி | **விருதுநகர்** (பொதுக்கூட்டம்) | சாத்தூர், ராஜபாளையம், சிவகாசி, திருவில்லிபுத்தூர், திருச்சுழி, அருப்புக்கோட்டை, விருதுநகர் |
| மாலை 5 மணி | **திருமங்கலம்** (பொதுக்கூட்டம்) | மேலூர், மதுரை கிழக்கு, சோழவந்தான், மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்தி, மதுரை மேற்கு, திருப்பரங்குன்றம், திருமங்கலம், உசிலம்பட்டி |

**குறிப்பு:** கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

---

### மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் நடைபெற்ற தொழிற்சங்கத் தேர்தலில்

## தொ.மு.ச. சார்பாக போட்டியிட்ட மு.இராஜகாந்தம் தலைவராக வெற்றி பெற்றுள்ளார்!



சென்னை, ஏப். 3 –

வடசென்னை திருவொற்றியூர் பகுதியில் உள்ள பெரும் பழமை வாய்ந்த மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையின் தொழிற்சங்கத் தேர்தல் 31.03.2026 அன்று நடைபெற்றது.

இதில் இரண்டு அணிகள் போட்டியிட்டன. தி.மு.கழக தொழிலாளர் அணியின் மாநில துணைச் செயலாளரும், தொ.மு.ச. பேரவை செயலாளருமான மு.இராஜ காந்தம் தலைமையில் ஒரு அணியும், NDLF தொழிலாளர் ஒருங்கிணைப்பு அணிசார்பாகதோழர்ப.விஜயகுமார் தலைமையிலும் ஒரு அணியும் என இரண்டு அணிகள் சங்கத்தேர்தலில் போடியிட்டனர்.

இதில் தொ.மு.ச. பேரவை சார்பாக போட்டியிட்ட மு.இராஜ காந்தம் தலைமையிலான அணியின் நிர்வாகிகள் முழு வதும் வெற்றி பெற்றுள்ளனர். அதே போல் மொத்தம் உள்ள செயற்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்பதில் ஏழு செயற்குழு உறுப்பினர்கள் மு.இராஜகாந்தம் அணியை சார்ந்தவர்கள்தான் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தொழிற்சங்கத் தலைவராக வெற்றிபெற்றுள்ள மு.இராஜ காந்தம், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக வடசென்னை பகுதியில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளில் தொழிற்சங்க பணிகளை செய்து வந்துள்ளார். மணலி எஸ்.ஆர்.எப். தொழிற்சாலையில் இதற்கு முன்பும் தொழிற்சங்கத் தலைவராக சங்கப்பணி செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வெற்றி பெற்ற தொழிற் சங்கத் தலைவர் மு. இராஜகாந்தம் அவர்களுக்கு கழக முன்னணியினரும், பல்வேறு தொழிற்சங்க பிரதிநிதிகளும் வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

மேலும் இவர் தி.மு.கழகத்தின் தொழிலாளர் அணியின் மாநில துணை செயலாளராகவும், தொ.மு.ச. பேரவை செயலாளர் பொறுப்பிலும் செயல்பட்டு வருகிறார்.



அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி வேட்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரனை ஆதரித்து செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் கலந்துகொண்டு பேசினார். உடன் கடற்கரைராஜ், சுப்பராஜ், சிவப்பிரகாசம், கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ஆர்.ரமேஷ், ஏ.கே.மணி, வக்கீல் விஜயகுமார், பாபுஜி, சாகுல் ஹமீது, பாலகணேஷன், பொன்ராஜ், கே.வி.கே.பிரபாகரன் மற்றும் மதச்சார்பற்ற கூட்டணியின் மாவட்ட தலைவர்கள் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மதுரை கிழக்கு தொகுதிக்குட்பட்ட கிழக்கு தெற்கு ஒன்றியப் பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். முன்னதாக கருப்பாயூரணியில் ஒன்றியத்திற்குட்பட்ட கழக தேர்தல் பணிமனையையும் திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மாவட்டப் பொருளாளர் சோமசுந்தர பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் அ.பா.ரகுபதி, ஹக்கீம், தலைமை கழக வழக்கறிஞர் கலாநிதி, தொகுதி பொறுப்பாளர் ஆனந்த், மாவட்டப் பிரதிநிதி அழகு பாண்டி, முன்னாள் எம்.எல்.ஏ. தமிழரசன், பகுதி செயலாளர்கள் பெ.சசிகுமார், கவுரிசங்கர், மாவட்ட அணி அமைப்பாளர்கள் எம்.இளங்கோ, ஆதிசங்கர், வீரராகவன், மூவேந்திரன், வினோத், ஒத்தக்கடை சரவணன், முன்னாள் மாவட்ட ஊராட்சி தலைவர் சூரியகலா கலாநிதி, கிழக்கு ஒன்றிய முன்னாள் துணை சேர்மன் பாலாண்டி, இளைஞரணி துணை அமைப்பாளர் மருதுராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கழகத்தினர், கூட்டணி கட்சி நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் பங்கேற்றனர்.